மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண்.12 /2017

பெயர் – காதர்பாஷா (வா.சா.1)

நாள் – 07.11.2022

பிரதிவாதி தரப்பில் கு.வி

ஷாஷகான் என்ன உறவு என்றால் எனது தம்பி ஆவார். தாவா சொத்துக்கான சர்வே எண் மற்றும் விஸ்தீர்னம் என்ன என்றால் 169/1 எ 11 ஆகும். விஸ்தீர்னம் 1 ஏக்கர் 33 செண்ட்கள் ஆகும். சர்வே எண்.169/1 எ 11 ஆவது சர்வே எண்.169/1 எ 11 எ, மற்றும் சர்வேஎண்.169/1 எ 11 பி என உட்பிரிவுகள் செய்யப்பட்டதா என்றால் செய்யவில்லை. சர்வே எண்.169/1 எ 11 க்கான மொத்த விஸ்தீர்னம் 6 ஏக்கர் 20 செண்ட் என்றால் சரியல்ல. தபசில் சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது தாத்தாவான அப்துல் ரஹ்மான் சாகிப் க்கு பாத்தியப்பட்டது. அவருடைய தகப்பனார் பெயர் என்றால் என்ன மிஸ்கின் சாகிப் ஆகும். பிரதாதில் தபசில் சொத்தில் ஆதியில் அப்துல் ரஹ்மான்க்கு புர்வீகமாக பாத்தியமாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதன் அடிப்படையில் பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் 1958 வருடத்திய இந்த சர்வே எண் மற்றும் வேறு சொத்துக்கள் சம்மந்தப்பட்ட கிரைய ஆவணத்தின் அடிப்படையில் சொல்கிறேன். 1958 ம் வருடத்திய கிரைய பத்திரத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை ஆனால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன. 1958 ம் வருடத்திய கிரைய பத்திரம் யார் யாரிடமிருந்து கிரையம் பெற்றது என்றால் அஸிரா பீவியம்மாளிடமிருந்து அப்துல் ரஹ்மான் சாகிப் கிரையம் பெற்றுள்ளார். எனது பிராது மற்றும் நிருபண உறுதிக்கூற்றில் அஸிரா பீவியம்மாளிடமிருந்து அப்துல் ரஹ்மான்சாகிப் கிரையம் பெற்றதாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் கிரையமே இல்லை என்றாலும் சரியல்ல. கிரைய ஆவணத்தை தாக்கல் செய்ய தயாரக உள்ளேன். தபசில் சொத்து அப்துல் ரஹ்மான்சாகிப்பிற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்பதை நிருபணம் செய்வதற்கான ஆவணம் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். தபசில் சொத்தானது அப்துல் ரஹ்மான்சாகிப்பிற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது கிடையாது என்பதால் அதுசம்பந்தமான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லைஎன்றால்

சரியல்ல. அப்துல் ரஹ்மான் தபசில் சொத்து மீது எந்த விதமான உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. அப்துல் ரஹ்மானின் வாரிசுகள் யார் யார் என்றால் மகன் ஹாத்திம்பாஷா, மகள் மதார்பீவி , மனைவி ஜெஹராபீவி, ஆவார்கள். வா.சா.ஆ.1 ஆவணம் ஹாத்திம்பாஷா மற்றும் அவரது தகப்பனார் அப்துல் ரஹ்மான்சாகிப் ஆகியோர்களுக்குள் நடந்த பாகப்பிரிவினை பத்திரம் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் தபசில் சொத்துக்கள் நமது குடும்பத்திற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு ஏகபோகமாக அனுபவித்து வந்ததோம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பாகவிஸ்தி பத்திரமான வா.சா.ஆ.1 ஆவணத்தில் தபசில் சொத்துக்கள் அப்துல் ரஹ்மானுக்கு எவ்வாறு வரப்பெற்றது என்பது பற்றி எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணமான பாகவிஸத்தி பத்திரத்தில் தபசில் சொத்துக்களை தவிர வேறு சொத்துக்களை பற்றியும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அப்துல் ரஹ்மான்சாகிப்பிற்கு வேறு வாரிசுகள் இருந்தும் ஹாத்திம்பாஷா பாகப்பிரிவினை செய்துகொண்டது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் மேசாடியாக ஏற்படுத்தப்பட்டது என்றாலும் அதனால் அந்த ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. ஹாத்திம்பாஷாக்கு எத்தனை வாரிசுகள் உள்ளனர் மனைவி பியாரி, மகன் காதர் பாஷா எனும் நான், நூர்முகமது, முபாரக் அலி, ஷாஜஹான், மகள் பாத்திமா, மகள் அன்சர், ஆகியோர்கள் ஆவோம். தபசில் சொத்துக்களை நாங்கள் அனைவரும் அனுபவித்தோம் என்றால் சரிதான். என் பெயரில் தீர்வை ரசீது ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. தபசில் சொத்துக்களை நாங்கள் அனுபவிக்காத காரணத்தினால் தான் இந்த பெயரில் உள்ள தீர்வை ரசீதுகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை எனது அப்பா பெயரில் உள்ள ரசீதுகளை தாக்கல் செய்துள்ளோம். கட்ந்த 15.10.2001ம் தேதி ஹாத்திம்பாஷா, தனது மனைவி பியாரி மற்றும் தனது மூத்த மகன் காதர் பாஷாவுக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில் மெண்ட் பத்திரம்தான் வா.சா.ஆ.3வது ஆவணம் என்றால் சரிதான். தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ஹாத்திம்பாஷாவுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதால் வா.சா.ஆ.3 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பியாரி இறந்த பின்னர் அவரது வாரிசுகள் அனைவரும் தபசில் சொத்தை சேர்ந்து அனுபவித்தோம் என்றால் சரிதான். பியாரி வாரிசுகள் யார் பெயரிலாவது தீர்வை

ஏற்பட்டு அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பியாரின் வாரிசுகள் யாரும் தபசில் சொத்துக்களை அனுபவிக்காத காரணத்தினால்தான் பியாரியின் வாரிசுகள் பெயரில் தீர்வை ரசீதுகள் இல்லை என்றால் சரியல்ல. 26.5.2015 ம் தேதியிட்ட வா.சா.ஆ.6 ஆவணமான தானசெட்டில்மெண்ட ஆவணம் காதர் பாஷா மற்றும் பியாரியின் வாரிசுகள் அனைவரும் சேர்ந்து வாதி ஷாஜஹானுக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. தபசில் சொத்தை பொறுத்து தான செட்டில்மெ்ண்ட எழுதிகொடுப்பதற்கு பியாரி மற்றும் காதா் பாஷாவுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனவே வா.சா.ஆ.6 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தபசில் சொத்தானது மைனர் பாலசுப்பிரமணியன் பிள்ளை என்பவரின் தாயரா் செல்லத்தம்மாள் கார்டியன் நிலமையில் இருந்து சாத்தூர் டி.மு. கோர்ட் ஓ.எஸ்.105/1938 இ.பி.எண்.399/1939 என்ற வழக்கின் மூலம் நீதிமன்ற ஏலம் மூலம் கிரையம் பெற்ற சொத்து என்றால் சரியல்ல. மேற்படி ஏலத்தை சாத்தூர் டி.மு. நீதிமன்ற நீதிபதி 4.6.1940 ம் வருடம் ஊர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பத்திரத்தில் அவ்வாறு இல்லை. நீதிமன்றம் மூலம் கிடைக்கப்பெற்ற சொத்தின் உடைய சர்வேஎண். சத்திரப்பட்ட கிராம சர்வே எண்.169/1 எ 11 அதன் விஸ்தீர்னம் 6 ஏக்கர் 20 சென்ட் என்றால் சரியல்ல. 1 ஏக்கர் 33 சென்ட் ஆகும். 1 ஏக்கர் 33 சென்ட் எவ்வாறு பாத்தியப்பட்டது என்று காண்பிப்பதற்கான ஆவணம் எதையாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது தாத்தா எனது தகப்பனாருக்கு கொடுத்த பாகப்பிரிவினை பத்திரம். எனது தகப்பனார் எனது தாயார் மற்றும் எனக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம். எனது தாயாரின் இறப்பிற்கு பின்பு நான் மற்றும் எனது மற்ற சகோதரர்கள் வாரிசுகள் அடிப்படையில் என் சகோதர் ஷாஜானுக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில், பட்டா ஆடர் தாக்கல் செய்துள்ளேன். நான் சொன்ன மேற்படி ஆவணங்கள் எதுவுமே 1 ஏக்கர் 33ெ சன்ட் நிலம் எங்களளுக்கு பாத்தியப்பட்டது என்பதை நிரூபிக்கும் இடமாக இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் தான் அனுபவித்து வந்தோம். அனுபவித்து வருகிறோம். 1939 ம் ஆண்டுக்கு முன்பாக தபசில் சொத்துள்ள எங்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது

என்பதற்கான எந்த ஆவணத்தையும் நாங்கள் தாக்கல செய்யவில்லை என்றால் சரிதான். தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். 1939 ஆண்டுக்கு முன்பாக தபசில் எங்கள் பெயரில் இருந்தது என்ற ஆவணத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் யாரிடமிருந்து கிரையம் பெறப்பட்டதோ அவர் பெயரில் உள்ள ஆவணத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். சர்வே எண்.169/1 எ11 விஸ்தீர்ணம் 6 ஏக்கர் 20 சென்ட்க்கனா நில விற்பனை சான்றுகள் சாத்தூர் டி.மு.கோர்டால் செல்லத்தம்மாளுக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மைனராக இருந்த பாலசுப்பிரமணியம் பிள்ளையின் மனைவி மற்றும் 2 முதல் 9 பிரதிவாதிகளின் குழந்தைகள் என்றால் சரிதான். பாலசுப்பிரமணியனின் தாயார் செல்லத்தம்மாள் இறந்த பின்னர் பாலசுப்பிரமணியனின் பெயரில் தாவா சொத்தான பட்டா, ஏற்பட்டது என்றாலும் அந்த பட்டா எண்.516 என்றாலும் சரியல்ல. தாவா சொத்து உள்ளிட்ட 6 ஏக்கர் 20 சென்ணட் நிலத்தை பாலசுப்பிரமணியன் வாரிசுகள் அனுபவித்து வந்தார்கள் சரியல்ல. அந்த சொத்துக்களான தீர்வை ரசீதுகள் பாலசுப்பிரமனியன் பிள்ளை வாரிசுகளின் பெயரில் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பாலசுப்பிரமனியன் பிள்ளை வாரிசுகள் பெயரில் கூட்டுபட்டா ஏற்பட்டுள்ளது என்றாலும் அதன் பட்டா எண்.736 என்றாலும் சரியல்ல. ஹாத்திம்பாஷா பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்யக்கோரி 2ம் பிரதிவாதி சிவகாசி வருவாய் கோட்டாச்சியரிடம் மனு கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த மனுவில் எனது தகப்பனார் ஆஜரான விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ஆர்டிஓ நடவடிக்கையில் எனது தகப்பனார் ஆஜராகி வாக்குமூலம் கொடுத்த விவரம் எனக்கு தெரியும் என்றாலும் நான் வழக்கிற்காக தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆர்டிஓ நடவடிக்கையில் ஹாத்திம்பாஷா தாக்கல் செய்தள்ள ஆவணங்கள் பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று சொல்லப்பட்டவை நிரூபிக்கப்படவில்லை என்று சொல்லி ஹாத்திம்பாஷா பெயரில் உள்ள பட்டா ரத்துசெய்யபட்டது என்றாலும் அதனால் வா.சா.ஆ.2 ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. ஆர்டிஓ நடவடிக்கையில் பாலசுப்பிரமணியன்பிள்ளை வாரிசுகளான 10 பேர்களின் பெயரில் கூட்டுப்பட்டா வழங்கவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த விவரங்கள் அனைத்தும் நான் தெரிந்துகொண்டே வழக்கிற்காக

மறுத்துவருகிறேன் என்றால் சரியல்ல. 10 ம் பிரதிவாதி வேலுச்சாமி பாலசுப்பிரமணியன் பிள்ளை வாரிசுகளிடமிருந்து கடந்த 25.9.2008 ம் தேதி ஒரு பதிவுசெய்யப்பட்ட கிரைய பத்திரம் மூலம் தபசில் சொத்துக்கள் உள்ளிட்ட வேறு சொத்துகளை சேர்த்து 6 ஏக்கர் 18 செண்ட் நிலத்தை கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. எங்கள் சொத்தையும் சேர்த்து பதிவு செய்துகொண்டார்கள். நான் சொல்வது போல் பிரதிவாதிகள் எங்கள் சொத்தையும் சேர்த்து பதிவுசெய்யவில்லை என்றால் சரியல்ல. 10 ம் பிரதிவாதி, தான் கிரையம் பெற்ற காலம் முதல் தபசில் சொத்து உள்ளிட்ட 6 ஏக்கர் 18 செண்ட் தொடர்ச்சியாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 10 ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தபசில் சொத்தை பொறுத்து எங்களுக்கு எந்த விதமான உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. தாவா சம்பந்தமாக தாக்கல் செய்திருக்கும் ஆவணங்கள் போலியாக உருவாக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே எங்களது வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.